Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.14/2025**

Preliminary Register

Deposition of **PW-1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழ்செல்வி | Husband Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Village | : | ராஜேந்திரநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of September 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் இருவரும் எனது ஊர்கார்கள் ஆவார். எனது கணவரை கடந்த 25.04.2017ம் வருடம் ரமணி என்பவருடன் எங்களுக்கு இருந்த பிரச்சனையில் அவர் கொலை செய்து விட்டார். எனது கணவரின் கொலை வழக்கில் ஆஜர் 2வது எதிரியும் குற்றவாளி ஆவார். கடந்த 24.08.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் ஆஜர் எதிரி கமல் போதையில் கிழக்கு மேற்காக நடந்து தகாத வார்த்தைகளால் என்னை எனது வாசலில் நின்று திட்டினார். எனது மூன்று மகன்களும் வெளியூரில் வசிக்கிறார்கள், கடந்த 7 வருடமாக நான் தனியாகதான்

வசித்து வருகிறேன். பக்கத்தில் உள்ள எனது பங்காளி வீட்டு பேரன் குரு ஆஜர் எதிரி கமலிடம் யாரைதான் பேசுகிறாய் என்று கேட்டார். அதற்கு ஆஜர் 1வது எதிரி கமல் இவளைத்தான் திட்டுகிறேன் என்று என்னை காண்பித்து செல்வியைத்தான் திட்டுகிறேன் என்று சொன்னார். எதிரி கமல் கையில் கத்தியை வைத்துக்கொண்டு கத்தியை காண்பித்து எனது கணவரை அறுத்து போட்டதுபோல் என்னையும் அறுத்து போட்டுவிடுவேன் என்று சொன்னார். (சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்) ஆஜர் எதிரி என்னை குச்சிகாரி, தேவுடியா என்று சொல்லமுடியாத வார்த்தைகளால் என்னை பேசினார். எனது உறவினர்களும் ஆஜர் எதிரி கமலின் அம்மா, தம்பி மற்றும் மனைவி ஆகியோர் பிரச்சனையை சமாதானம் செய்து எதிரியை அழைத்து சென்றனர். அன்று இரவு 12.00 மணியளவில் போலீசார் வந்தார்கள். நான் மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

எனது வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக நான் கூறுவது சுமார் அரை மணிநேரமாக நடந்தது என்றால் சரிதான். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். எனது கணவரை கொலை செய்த வழக்கில் இருந்து இவ்வழக்கின் 2வது எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில்தான் விடுதலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் நடந்தது கடந்த 2024ம் வருடம் 8வது மாதம் ஆகும். நான் முதல் விசாரணையில் போலீசார் சம்பவத்தன்று இரவு 12.00 மணிக்கு வந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளேன். அச்சமயத்தில் போலீசாரிடம் சம்பவம் குறித்து விபரம் கூறினேனா என்றால் கூறினேன். அப்போது வந்த போலீசார் யார் என்ற விபரம் தெரியாது. மறுநாள் காலையில் கால தாமதாமாக புகார் கொடுத்ததற்கு சிறப்பு காரணம் ஏதும் உள்ளதா என்றால் வந்த போலீசார் 1வது

எதிரி போதையில் இருந்தார் அதனால் காலையில் வாங்கள் என்று கூறினர். இந்த விபரத்தை புகாரில் நான் கூறவில்லை என்றால் புகாரில் கூறவில்லை. இரவு என்னுடன் வருவதற்கு யாரும் இல்லாத காரணத்தால் நான் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். சாட்சி அறிவழகன் எனது கொழுந்தனார் ஆவார். சாட்சிகள் ஜெகந்நாதன் மற்றும் ரவி ஆகியோர் எனது பங்காளி முறை ஆவார்கள். சாட்சிகள் சக்திவேல் மற்றும் குரு எனது பேரன்கள் என்றால் அவர்கள் எனது பங்காளி முறை பேரன்கள் ஆவார்கள். சாட்சி சர்குணம் எனது கொழுந்தனார் அறிவழகனின் மைத்துனர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரை நான் எழுதவில்லை என்றால் நான் தான் எழுதினேன். மேற்படி புகார் எந்த தேதியில் எந்த நேரத்தில் கொடுக்கப்பட்டது என்பதற்கு தேதியோ மணியோ புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் , " 09.00 மணியளவில் ஆஜர் எதிரி கமல் போதையில் கிழக்கு மேற்காக நடந்து தகாத வார்த்தைகளால் என்னை எனது வாசலில் நின்று திட்டினார். எனது மூன்று மகன்களும் வெளியூரில் வசிக்கிறார்கள், கடந்த 7 வருடமாக நான் தனியாகதான் வசித்து வருகிறேன். பக்கத்தில் உள்ள எனது பங்காளி வீட்டு பேரன் குரு ஆஜர் எதிரி கமலிடம் யாரைதான் பேசுகிறாய் என்று கேட்டார். அதற்கு ஆஜர் 1வது எதிரி கமல் இவளைத்தான் திட்டுகிறேன் என்று என்னை காண்பித்து செல்வியைத்தான் திட்டுகிறேன் என்று சொன்னார். எதிரி கமல் கையில் கத்தியை வைத்துக்கொண்டு கத்தியை காண்பித்து எனது கணவரை அறுத்து போட்டதுபோல் என்னையும் அறுத்து போட்டுவிடுவேன் என்று சொன்னார்." என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளேன் அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் முன்விரோதம் காரணமாக பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னை திட்டவும் இல்லை மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மற்றும் எனது மூன்றாவது மகன் மீது கொலைவழக்கு இருந்தது என்றால் சரிதான். மேற்படி கொலை வழக்கில் எனது மகனும் எனது கொழுந்தனார்

அறிவழகனும் தண்டணைப் பெற்று தற்போது தண்டனை முடிந்து விடுதலையாகி உள்ளனர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.09.22 16:40:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.